செய்தித் தாளாகப் பதிவுபெற்றது
வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும்

சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஹு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஹு கார்த்திகை மீ ரு-உ வெள்ளிக்கிழமை (21-11-1975) [இல: ௩௩

## ஆலயப் பணிபற்றி ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்

# அன்று வெளியிட்ட கருத்து

## இன்றும் மேலாக இயையும்

[யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் ஆக்கிய "நாவலர் பெருமான்" என்ற நூலிலிருந்து வெளியிடப்படுகின்றது.]

நாவலர் சிவாலய தரிசனத்தைச் சிறந்த சமயஒழுக்கமாக வற்புறுத்தினர். யாழ்ப்பாணத்திலுள்ள சில சிவாலயங்களைப் புதுக்கவும், அமைக்கவும், திருத்தவும் முயன்றார். திருக்கேதீச்சரம் தேவாரம் பெற்ற திருத்தலம். அதில் இருந்த கோயிலை அன்னியர் அழித்துத் தரை மட்டமாக்கிவிட்டனர். நிலத்தையும் அரசினர் எடுத்துக் கொண்டனர். அதை மறுபடி வாங்கிக் கோயில் கட்ட நாவலர் முயன்றனர். ஆனால் துவைனந்துரை தர்பார் நாவலருக்குள திரிடையாயிருந்ததால், காரியம்நடக்கவில்லை. இவர் காலத்திற்குப் பிறகு, துரையேஇவரது நேர்மையை மெச்சி, அந்த நிலத்தைச் சைவர்களுக்குத்தந்தார்; ஆலயமும் எழுந்துவிளங்குகிறது.

### கீரிமலை

அதேமாதிரி கீரிமலையிலும் இப்போது விளங்கும் கோயிலுக்கு முயன்றவர் நாவலரே.

[வளர்ச்சி 3-ம் பக்கம்]



பூதலம் வாழ்கதண் பொன்மூகில் வாழ்க புவியரசர்
வேதசி வாகம மெய்த்தமிழ் வேதம் விளங்குசிவ
போதசித் தாந்தமன் வீடு வாழ்கமெய்ப் பூரண! வெங்
கோதகல் ஆறுமுகநா வல சற் குருமணியே!

— சற்குருமணிமாலை

## நாவலர் விழா

சைவபரிபாலன சபையார் ஆதரவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசையும் விழாவும் வழமைபோல நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். குருபூசை நாள் 26-11-1975 நிகழ்ச்சி நிரல் விளம்பரமாக வெளிவரும்.

சபை மண்டபத்திலே

## சமய தீட்சை

"மனிதராய்ப் பிறத்தல் அரிது. இவ்வரிய மானிடப்பிறவி நமக்குக் கிடைத்தது. சிவபெருமானே வழிபட்டு முக்தி எய்தற் பொருட்டேயாகும். சைவசமயத்திற் பிறந்தோர் புண்ணியஞ் செய்தவர்களாகக் கருதல் வேண்டும. சிவபெருமானுடைய திருவடியை அடைவதற்கு பஞ்சாட்சர செபத்தை புரியும்அதிகாரத்தைப பெறுதற்கு தீட்சை இன்றியமையாததாகும். அதனைப் பெறுதற்கே இன்று நீங்கள் சமயதீட்சை பெற்றிருக்கின்றீர்கள். தீட்சையென்பது அஞ்ஞானத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பதாகும். சிவபெருமான் என்றும் எங்கள் நெஞ்சில் நீங்காதிருக்கின்றார் நாங்கள் அவரை என்றும் மறந்திருக்கின்றோம். அம்மரபை உண்டாக்குவது ஆணவ மலமாகும். அவ் வாணவமலத்தின் வலிமையை நீக்குவதே பஞ்சாட்சரத்தின் வலிமையாகும். நீங்கள் தினமும் ஸ்நானஞ் செய்து தூய ஆடைதரித்து ஆசார சீலராய்ச் சந்தியாவந்தனஞ் செய்து பஞ்சாட்சரசெபம் செய்தல்வேண்டும. 'வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாம நமச்சிவாயவே'.

"இக்காலம் நமது மக்கள் மிகவும் அல்லற் படுகின்றார்கள். அவர்களின் துன்பத்தை நீக்கு

(வளர்ச்சி 2ம் பக்கம்)

குருநாகலில்

## நாவலர் விழா

புலவருக்கும் புரவலருக்கும் பாராட்டு

குருநாகல் சைவ மகாசபையினர் நாவலர் விழாவை யொட்டி எதிர்வரும் 29-ம் திகதி நடாத்தும் முத்தமிழ் விழாவில் சைவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும். சிவநெறிக் காவலர் க. கனகராசா J. P. அவர்களும் பாராட்டப்படுவர்.

பிரம்மஸ்ரீ கி. லஷ்மண ஐயர் தலைமையில் நடைபெறும்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

வாலிபர்களுக்கு

# நாலு அம்சமதியுரை

## மட்டுவில்

## கண்ணகி சனசமூகநிலைய விழாவில்

### பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

விநாயகப் பெருமானின் திருவருளை முன்னிட்டுக் கொண்டு சாந்தநாயகியோடு கூடிய சந்திரமௌலீசப் பெருமானை இருதயத்தில இருத்தித் தியானம் செய்வோமாக.

கண்ணகிதேவியின் சந்நிதியிலே தேவியின் பெயராலமைந்த இங்கச் சனசமூக வாசிப்பு நிலையம் நல்ல முறையில் வளர்ச்சியுற்று யாவர்க்கும் பயன் விளைத்தலை வேண்டித் தேவியைப் பிரார்த்திப்போமாக.

இந்த மண்டபத்தில் விசேட விருந்தினராய்ச் சமூகஞ்செய்திருக்கும் வள்ளல் திரு. க. கனகராஜா அவர்கள் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரும் புண்ணிய கரரியம் எங்கே நடக்குமோ அங்கேயெல்லாம் மூக்கிய பங்கு கொண்டு வள்ளண்மை செய்து வருகின்றார்கள். ஏழைகள், அநாதர்கள், நோயாளிகள், மூதியவர்கள், வள்ளல் அவர்களின் தயைக்குப் பாத்திரமாய் வள்ளல் அவர்களை வாழ்த்துவது குளிர்ச்சிதரும் பெரிய காரியம். அவர்கள் பரப்பும் ஆத்மீகச் செல்வங்களாகிய பிரசுரங்களுக்கு அளவே இல்லை.

இத்துணைச் சிறந்த வள்ளல் அவர்களுக்கும், சபையோருக்கும் மகிழ்ச்சி பொங்கும் வணக்கத்தை இம்மணடபம் தெரிவித்துக் கொள்கின்றது.

வள்ளல் அவர்கள் இங்கே மங்களகரமாகச் செய்து வைக்கும் பேரொளிப் பிரகாசம். ஒரு காலத்திலே கடவுட் பக்திக்கும் புராண படனத்துக்கும் தமிழ் சமய விருத்திக்கும் உறைவிடமாயிருந்த இந்த ஊரின் பெருமையை விளக்கம் செய்து வாலிப இளைஞர்களையும் வருஞ் சந்ததியினரையும் ஊக்கப்படுத்தி வைக்கும் என்பது பூரண நம்பிக்கை.

இப்பொழுது வள்ளல் அவர்கள் தமது கரங்களால் இம் மண்டபத்தைப் பிரகாசிக்கச் செய்யும் முகத்தால் இத் தென்மராட்சியையே பிரகாசிக்கச் செய்திருக்கின்றார்கள். வள்ளல் அவர்களை வாழ்த்துவோமாக.

வாலிபராகிய இளைஞர்களுக்கு நாலு காரியம் அத்தியாவசியகம் சொல்லி வைக்க வேண்டியதுண்டு

ஒன்று (1). சிலப்பதிகார காலந்தொட்டுக் கண்ணகி தேவியின வரலாற்றை அறிந்திருக்க வேண்டியது

இரண்டு(2). உயிர்ப்பானதொரு காரியம். அது மட்டுவில் சந்திரமௌலீசர் ஆலய வரலாறு இந்த இலங்கையில் மிக விசேடமான சிவலிங்கம் சந்திரமௌலீசர்.

தம்மை வணங்கும் பக்குவர்கள் குறைய உயர்ந்த பரிசுத்த இலிங்கங்கள் மறைவது இயற்கை, மக்கள் தம் குறையை உணர்ந்து தவத்தைப் பெருக்க மறைந்தவை வெளிப்படுவதுண்டு.

சந்திரமௌலீசர் ஏதோ ஒருவகையில் வெளிப்பட்டு அருள்புரிவார் என்பதற்குப் போதிய அறிகுறி உண்டு.

இப்பொழுதைய முகாமைக்காரரின் அரிய முயற்சிகளை அறியும்போது மகிழ்ச்சி பொங்குகின்றது ஆலய புனருத்தாரண முயறசியில் வாலிப இளைஞர்களின ஒத்துழைப்பு அத்தியாவசியகம் என்பது அறியத்தக்கது. எங்கள் பிரதிநிதி என்ற முறையிலன்றித் தம் ஒத்துழைப்பை நல்குவாரென்பதிற் சந்தேகமேயில்லை,

இந்த நாட்டின் உயிர் சந்திரமௌலீச ஆலய புனருத்தாரணமேயாம். இது சத்தியம்! சத்தியம்!! முக்காலும் சத்தியம்!!!

சிவாலயம் புனருத்தாரணமாகும் போது அயலில் அமைந்த விநாயகராலய

(வளர்ச்சி 3 ஆம் பக்கம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத ஹூ கார்த்திகை மீ ௫-௨ வெள்ளி

## நானிலம் போற்றும் நாமம்

ஒவ்வொரு நாழிகைப் பொழுதிலும் எவ்வகையிலும் எடுத்தாளப்பெறும் ஒப்பரிய நாமம் 'நாவலர்' என்பது. வாழ்க்கை வழி நூலாக எங்ஙனம் திருக்குறளை எடுத்துக் காட்டுக்குச் சொற்பெருக்குவோரும் எழுத்தாளரும் குறிப்பிடுகின்றார்களோ அங்ஙனம் சைவ நெறிப் போதனைக்கு நாவலர் நூல்களைக் கற்றோர் மேற்கோளாகச் சுட்டிக் காட்டுவர். வள்ளுவர் வாய்மொழி போல் நாவலர் நல்லுரை தமிழகக் கருத்துக் களஞ்சியமாக விளங்குகின்றது.

இத்தகைய உத்தம தத்துவம் வாய்ந்த நாவலர் நற்றமிழை மக்கள் வல்லார்வாய்க் கேட்டல் மட்டும் போதாது. நாவலரின் நல்லுரைகள் சொல்லுவனவற்றை நல் வாழ்வின் குறிக்கோளாக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு யாவரும் நாவலர் நூல்களைக் கற்பதற்குச் சிறந்த வழி அவற்றைக் கல்விக் கழகங்களிலே ஒரு பாடமாக அமைப்பதுவே. ஆங்கில மொழியிலே இந் நாட்டிற் கல்வி புகட்டப் பெற்றகாலத்திலே சேக்ஸ்பியர் மில்றன் போன்ற பெரும் புலவர்களின் நூல்களில் ஒன்று உயர்தரங்களிலே பயிலும் மாணுக்கர்களுக்குக் கட்டாய பாடமாக அமைந்திருந்தது. கீழ் வகுப்புகளிலே அப் பெருங் கலைஞரின் வரலாறு பாடமாகக் கற்பிக்கப் பட்டு வந்தது. அந்த நெறி இலக்கிய பாடத்துக்கு உகந்ததாகக் காணப்பட்டது. எனவே தமிழ் இலக்கியக் கல்விக்கு நாவலர் நூல்கள் இன்றியமையாதன வாகையாற் கலாசாலைகளிலே அவை பாடத்திட்டத்தில் இடம் பெறுதல் அவசியமாகும்.

நாவலர் நற்றகையார் ஓர் கலாநிதியென்பதை எடுத்துக் காட்ட மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம பிள்ளை இயற்றிய செய்யுட்களில் ஒன்று போதும்

மன்னுபெரும் தமிழ்ப்பாடை யிலக்கணமும்
இலக்கியமும் வரம்புகண்டோன்
பன்னுசிவ புராணங்கள் பலதெரிந்தோன்
சிவாகமநூற் பரவைமூழ்கி
உன்னுமநு பூதியெனும் விலைவரம்பி
லாமணிகை யுறக்கொண் டுள்ளான்
இன்றுநய குணத்திறலச் சைவமெனும்
பயிர்வளர்க்கு மெழிலி போல்வான்.

செந் தமிழும் திகழ் வடநூலும் ஆங்கிலமும் கற்று மதிநுட்பச் செறிவினுற் கற்றோர்க்குத் தாம் லரம்பாகும் பெற்றியடைந்த நாவலர் பெருமானின் கலைக் களஞ்சியத்தை இடைவிடாதனுபவித்துவரும் பண்டித பரம்பரையொன்று இந் நாட்டில் இருப்பதனாலேயே நாவலர் நமத்தை நாமென்றும் கேட்க வாசிக்கக் கூடியதாயிருக்கின்றது. இப் புனிதப் பணியிலே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் இடையறுதீடுபட்டு வருகின்றார். சேக்ஸ்பியர் செய்யுட்களுக்கு வெறிற்றி என்ற கலைஞன் கொடுத்த கருத்து விளக்கத்தை இலக்கிய மாணுக்கர்கள் கட்டாயமாகப் படிப்பார்கள். அதுபோன்று பண்டிதமணியின் நாவலர் விமரிசனம் கல்விகற்போருக்குப் பேருதவியாக மிளிர்கின்றது. இவ்வாண்டுக் குருபூசையின் பயனுக நாவலர் நல்லுரை என்னும் ஒரு பாடப் புத்தகத்தைப் பண்டிதமணி ஆக்கி வெளியிடுவரேயானுற் றமிழகம் களிப்பெய்தும்.

x x x

## ஆரிய திராவிட ஆசான்

கல்வித் திணைக்களத்தில் அக்காலத்திற் கடமையாற்றியவர்களிலே சைவத்துக்கும் தமிழுக்கும் பணிபுரிந்த பெரியார்களுள் அந்தணர்திலகம் சிவத்திரு. சதாசிவஐயர் அவர்களும் ஒருவர். நெடுங்காலம் ஆங்கிலக்கல்லூரி [illegible] ரியராக இருந்த ஐயர் அவர்களின் திறமை அவரை [illegible] தியாதரிசிப் பதவியிற் சேர்த்தது. அப் பணியில் ஒப்பற்ற கீர்த்தி பெற்று வித்தியாதரிசியர் தலைவனுக விளங்கிய இவர் ஆரியமும் திராவிடமும் ஒன்றிற்கொன்று சீரிய தொடர்புடையனவாகையால் அவற்றை ஒருங்கு கற்பது பெரும்பயனுடைத்தென்றுகருதி ஒரு கல்விக் கழகமமைத்து அருந்தொண்டாற்றினர்.

வடமொழி நூல்களிலமைந்த வளத்தைச் செந்தமிழில் மொழிபெயர்த்து வெளியீடுகள் பலவற்றைத் தொகுத்த ஐயரவர்கள் "தேவிமானச பூசை அந்தாதி" என்ற வழிபாட்டு நூலையும் இயற்றினர்.

கல்வியே கருந்தனம் என்று கருதி வித்தியாதரிசியாக இருந்தபொழுதும் ஓய்வெடுத்த பின்பும் சைவநெறிப் [illegible] தொண்டாற்றிய ஐயர் அவர்களின் [illegible] திருப்பது கடமையாகும்.

## பரமன் சேய் மீது பத்து வெண்பாக்கள் [2]

"சொக்கன்"

முருகப் பெருமானின் வீரமும், விறலும், படையும், அழகும், குலமும் பேசி அவனை உள்ளத்தே வந்து உறையுமாறு வேண்டிய புலவர், அவன் திருக்கரத்தே விளங்குகின்ற வேலினை அடுத்து நினைவு கூர்கின்றார் வெற்றிதரும் வேற்படை திருவருட் சத்தியின் வடிவமாகும். 'எண்ணில் வேதாகமம் பகர்ந்த தெய்வத்துருவமெல்லாம் அது தானுய் விளங்கிடும் உண்மையதே' எனப் பெரியார் ஒருவர் வேலின் திறத்தினை விண்டுரைக்கின்றார். 'கோகைமே லுலவுங் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி, வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை' என்பர் சைவ எல்லப்பர்.

இத்தகைய வேற்படையானது வீரனும் முருகனின் மெய்விட்டு என்றும் விலகுவது இல்லை. மெய்யாகிய ஞானத்திலும் விலகுவதில்லை. சிவபெருமான் 'சத்தி பின்னம் இலான்'. முருகவேளும் ஞான சக்தியாகும் வேலினை என்றும் நீங்கி இரான்

'மெய்விடா வீரன்கை
வேல்'

சூரபன்மனுக்கு மறைவாய் ஓடிவரலான இரவுஞ்சகிரியைப் - ஆணவப் பாறையைப் - பிளந்தது எது? இந்த வீரவேல்தான். சூரனின் வலிமை குன்றுமாறு போரிட்டது எது? அதுவும் இந்த வெற்றி வேலே.

'குன்றம் எறிந்ததுவும்,
குன்றப்போர் செய்ததுவும்,'

வேலின் திருவிளையாடல் தாம் இம்மட்டோ? அரக்கரின் வலியை அழித்தலாகிய துஷ்ட நிக்கிரகத்தோடு, அமரின் இடர் தீர்த்தலாகிய சிஷ்ட பரிபாலனமும் வேலின் வெற்றியேயாகும்.

'அன்றங் (கு) அமரர்
இடர் தீர்த்ததுவும்'

வெற்றித் தனிவேலின் வீரமகிமை இத்துடன் நிற்கவில்லை. 'வானுடர் காணுக மன்னுகிய முருகனிடத்தே ஆற்றுப்படுத்தி அடியவனுகிய யான் அவன் திருப்பாதப் போதுகளைப் பற்றும் வரை ஏழையேனைக்கைவிடாது நின்று அருளுவதும் வேலினது வேலையாம்' என்று புலவர் கூறி உருகக் காணுகின்றோம்.

'கைவிடா நின்றதுவும்'

ஆகிய வேல், புலவர் பெருமானைக் (நக்கீரரை?) கற்பொதும்பிலே யிருந்து காத்ததுமாகும். அவ்வரலாறு வருமாறு:-

ஒருநாள், புலவர் பொற்றாமரைப் பொய்கையிலே நீராடி அதன் கரையிலே தியானம் செய்துகொண்டிருந்தார் அவ்வேளையிலே கரையில் நின்ற ஓர் அரச மரத்தினின்றும் பொய்கையினுள்ளே விழுந்த இலையானது ஒருபகுதி மீனுகவும், மறுபகுதி பறவையாகவும் மாறின. இவ்விரு பிராணிகளும் ஒன்றையொன்று இழுக்கமுயன்று வருந்தின. இதனைப் புலவர் (நக்கீரர்?) கண்டு தம் தியானத்தைச் சற்றே மறந்திருந்தார், அதுகாலை இவ்வாறு தியானத்திற் கவனம் செலுத்ாதிருந்தோரைப் பிடித்தடைத்து அவர்களின் தொகை ஆயிரமாகும் வரை காத்திருந்த பூதம் ஒன்று இவரைச் சிறைசெய்து குகையிற் கொண்டுசென்று அடைத்தது. இவரோடு தொகை ஆயிரமானதால், பூதம் அன்றே அவர்களை வழுங்கும் என்று அஞ்சிய மற்றையோர். புலவரை நோக்கி "உம்மாலே நாம இன்று இறக்கும் நிலை உண்டானது" என்றுகூறி வருந்தினர். தமது இறப்பைப் பொருட்படுத்தாத புலவர், தம்மால் மற்றையோரும் இறக்க நேரிடுமே என்று அஞ்சி முருகப் பெருமான் மீது திருமுருகாற்றுப்படை எனனும நூலினை இயற்றினர் என்றும், முருகனின் சுடர்த் திருவேலானது பூதத்தைக் கொன்று புலவரையும், பிறரையும் காத்தது.

இந்தச் செய்திக்குக்

'கற்பொதும்பிற்
காத்ததுவும்,

என்ற சொற்றொடர் ஆதாரம் என்பர். ஆஃ தெவ்வாறயினும் ஆகுக. அடியவரின் மனமாகிய இருட்குகையிலே ஞான சத்தியானது எழுந்தருளிப் பிறவித்துயரினின்றும் அவரைக் காக்கின்றது என்னும் பொருளே சிறப்புடைத்து. அடியவரின் மனக் குகையில் எழுந்தருளுதல் காரணமாக முருகனுக்கு, 'குகன்' என்ற பெயர் அமைந்ததுவும் இவ்விடத்தே கருதத்தக்கது. பாடலை நோக்குவோம்.

குன்றம் எறிந்ததுவும்
குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர்
தீர்த்ததுவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும்
கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

(குன்றப் போர் என்பது 'குன்றின்கண் போர்' எனவும், சூர்வலிமை குன்றப்போர் எனவும் ஆணவ வலி குன்றும வண்ணம் நிகழ்த்திய அருட்போர் இருவகைப் பொருள் நயம் அமைந்து விளங்குதல் கருதத்தக்கது.)

(வருளம்)

சபை மண்டபத்திலே

(1 ஆம் பக்கத்து வளர்ச்சி)

உதற்கு பஞ்சாட்சரசெபம் பெருந் துணை புரியும். சாத்துவிக குணத்தை அடைதற்கு தாவர உணவே உகந்தது. ஆகையினுல் நீங்கள் மச்சமாமிசம் புசித்தலை ஒழித்தல்வேண்டும். சிவபெருமானை நிந்தித்தலாகாது. அவர் அருளிய வேதசிகாமங்களையும் நிந்திக்கலாகாது. குருவையுர் தாய் தந்தையர்களை யும் சிவனடியார்களையும் போற்றல் வேண்டும்"

இவவாறு 14-11-75 ஐப்பசி மாதம் கடைசி வெள்ளிக்கிழமையன்று நாவலர் மண்டபத்தில் தீட்சை பெற்றவர்கட்கு குருவாயிருந்த கரணவாய் ஆதீனம் ஸ்ரீமத். கை. திருஞானசம்பந்தக் குருக்களவர்கள் உபதேசஞ் செய்தார்கள். 75 பேர் வரையில் சமய தீட்சை பெற்றூர்கள். யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் உரிமையாளர் திரு க. கனகராசா அவர்கள் உகந்தளித்த நித்தியகருமவிதி என்னும் நூல் வழங்கப்பெற்றது.

குருநாகலில் நாவலர் விழா

(1ம பக்க வளர்ச்சி)

கருத்தரங்கில் சமுதாய நல்வழிகுறு துணை - கல்வி சமயம், இலக்கியம், சட்டமும் ஒழுங்கும் என்னும் பொருள்பற்றி முறையே திரு. இரா. சிவலிங்கம், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வித்துவான் வேல் மாறன், உடுப்பிட்டி திரு. மூ. சிவசிதம்பரம் ஆகியோர் விவாதிப்பர்.

வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடைபெறும் கவியரங்கில் கவிமணி வி. கந்தவனம், கவிஞர் அம்பி கவிஞர் மூ. பொன்னம்பலம் ஆகியோர் பங்குகொள்வர்.

இசையரங்கு, நடன அரங்கு நாடக அரங்கு முதலியன இடம் பெறும் இவ்விழா ஒழுங்குகளை சபைச் செயலாளர் திரு மூ. இராமலிங்கம் அவர்கள் கவனித்து வருகிறார்.

## வளாக விடுதிச்சாலை

யாழ்ப்பாண வளாகத்திலே புதிய விடுதிச்சாலை யொன றினை அமைத்தற்கு உபவேந்தர் திரு. எல். எச். சுமணதாஸ அவர்களும் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் திரு கே. பாஸ்கரலிங்கம் அவர்களும நவம்பர் ஏழாம் திகதி திருநெல்வேலியில் அத்திவாரக்கல் நாட்டினர். அதே தினம் வட்டுக்கோட்டை நீர்த் தேக்கத்திற்கான அத்திவாரக் கல்லும் நாட்டப்பட்டது. விரைவிலே, யாழ்ப்பாண வளாக மனிதப் பண்பியல்பீடக் கட்டிடமும் அமைக்கப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயப்பணிபற்றி

1ம் ஆம் பக்கத்து வளர்ச்சி

அதைப் பற்றி விடுத்த அறிக்கை ஒன்று உதயதாரகையில் வந்தது. அதை அப்படியே இங்கே காண்க, நல்ல காரியங்களுக்காக இந்த மகான் பொருள் மதடிய நேர்மையும் இதில் விளங்குகிறது.

"யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரத்துக்கு வடமேற்கே, இரண்டு மைல் தூரத்திலுள்ள கீரிமலையிலே, ஆதியில் ஒரு பெரிய சிவன்கோயில் இருந்தது. அது போர்த்துக்கேசரால் இடிபட்டது. கீரிமலையின் அடியினின்றுஞ் சுத்தஜலம் ஊற்றெடுத்துக் கடலினுள்ளே பாய்கின்றது. அந்தச் சங்கமம புண்ணிய திர்த்தம் என்று விசுவசித்தன்றே, யாழ்ப்பாணப் எங்குமுள்ள சைவசமய சனங்கள், விசேஷ தினங்களிலே அங்கேபோய் ஸ்நானஞ் செய்கின்றார்கள். அநேகர் அங்கே சங்கற்பஞ் செய்து ஒரு மண்டலம், அரை மண்டலம் ஸ்நானஞ் செய்து கொண்டிருக்கிறார்கள். அநேகர் அந்தியேட்டி சிரார்த்தம் முதலிய கிரியைகள் கிரியைகள் உங்கேபோய்ச்செய்கிறார்கள். அவர்களெல்லாம் ஸ்நானஞ் செய்தவுடனே சுவாமி தரிசனம் செய்யும் பொருட்டு அங்கே ஒரு கோயில் இல்லையே. யாழ்ப்பானத்தில எத்தனையோ இடங்களிலே கோயில் சமீபத்திலிருக்கவும் புதிதுபுதிதாகக் கோயில் கட்டும் நம்மவர்கள் எல்லாச் சனங்களுக்கும் பொதுத் தலமாகிய கீரிமலையிலே ஒரு கோயில் கட்டுவிக்க இதுவரை நினையாதது என்னையோ?

கீரிமலையிலே ஒரு கோயில் கட்டுவித்துச் சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்து, நித்தியபூசை நடத்துவிப்பது மேலாகிய சிவதருமம். பொருளுதவி செய்வார்களானுல் இந்தச் சிவ தருமத்தைத் தொடங்கி நிறைவேற்றலாம்.

1, சனங்கள் இந்தச் சிவ தர்மத்தின் பொருட்டுப் பணமாகவேனும் மரம், கல், சுண்ணும்பு முதலிய உபகரணங்களாகவேனும் தங்களால் இயன்றது கொடுத்தல் வேண்டும்.

2. கீரிமலையிலே அந்தியேட்டி சிரார்த்தம் செய்யும் சனங்கள் தகுதியாகியதானப் இரண்டு இந்தச் சிவதருமத்தின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.

3. கீரிமலையிலே அந்தியேட்டி செய்யும் குருமார்கள் அந்தியேட்டி தட்சிணையிலே அந்தியேட்டி ஒன்றுக்குக் கால்ரூபாவீதம் இந்தச் சிவதருமதின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.

4. கீரிமலையிலே விசேஷ தினங்களிலே போய் ஸநானஞ் செய்கிற ஜனங்கள் இந்தச் சிவதருமத்தின் பொருட்டு அங்கே வைக்கப்படும் உண்டிப் பெட்டியிலே தங்கள் தங்களாலியன்ற பணத்தொகை போடல் வேண்டும்.

5. கீரிமலைக்குச் சமீபத்திலுள்ள ஊர்களில் வசிக்கும் சனங்கள் தங்கள் தங்கள் நிலங்களிலே நெல், சிறுதானியம், காய்கனி, வெற்றிலை, புகையிலை முதலிய பலன்கள் உண்டாகும்

# வாலிபர்களுக்கு

1 ஆம் பக்க வளர்ச்சி

மும் புனருத்தாரணமாக வேண்டுமென்று பிரார்த்திப்போமாக.

இரு ஆலய புனருத்தாரணத்திலும் சிரத்தையுடையோர்பலர். அவர்களைப் பயன்படுத்தும் முறையில் பயன்படுத்துவது வாலிபரின் கண்ணுங்கருத்துமான முயற்சியில் தங்கியிருக்கிறது.

மூன்று (3). 1875தொடக்கம் நாவலர் மாணுக்கான உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை உபாத்தியார் செய்த கல்விச் சேவை, தென்மராட்சியில் ஒவ்வொரு ஊரிலும் அவர் மாணக்கர்கள் செய்த கல்விச் சேவை அதிகம். இந்த மூன்ருவது விஷயம் மிக விரிவாக அறிய வேண்டியது.

நான்கு (4) திரு. நா. செல்லப்பா அவர்களின் மிகக் கூரிய விவேகம.

சைவக் கல்விச் சேவையில் ஈடுபட்டதன் பலன் குறிப்பிட்ட நான்கு விஷயங்கள் பறறியும் விரிந்த கட்டுரைகள் எழுதி உதவும் கருத்துண்டு. வாலிபரின் உள்ளக் கிளர்ச்சி குறிப்பிட்ட கட்டுரைகளுக்கு எழுதுகோலாய் அமைவதாக

முதியோராகிய உபாத்தியாயர்களைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட விஷயங்களில் விளக்கம் பெறுவது வாலிபர்களின் தலையாய கடனுகும்.

---

பொழுது அவைகளிலே தங்களாலியன்றது இந்தச் சிவ தருமத்தின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.

6. கீரிமலைக்குச் சமீபத்திலுள்ள ஊர்களில் வசிக்கிற சைவசமய சனங்கள், இந்தச் சிவ தருமத்தின் பொருட்டுத் தங்கள் தங்கள் வீடுகளிலே போடப்படுகிற குட்டான்களிலே நாளொன்றுக்கு ஒரு பிடி அரிசி போட்டு அந்த அரிசியை மாதமுடிவில் வரும் தண்டல் ஆளிடத்தில் ஒப்பித்தல் வேண்டும்.

7. காங்கேயன்றுறையிலே அரிசி, நெல் இறக்குமதி செய்கிற வியாபாரிகள் அரிசி, கரிசை ஒன்றுக்கு ரூபா அரை; நெல், கரிசை ஒன்றுக்கு ரூபா கால்வீதம மகமை இந்தச் சிவதருமத்தின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்,

8. தகுதியாகிய பணத்தொகை வைத்துக்கொண்டு சிவதருமஞ் செய்ய விரும்புகிறவர்கள் கீரிமலைச் சிவன் கோயிலிலே தங்கள் தங்களால் இயன்ற திருப்பணி செய்வித்துக் கொள்ளலாம். அவரவர் செய்வித்த திருப்பணியிலே அவரவர் பெயர் வெட்டப்படும்.

இங்ஙனம்

க. ஆறுமுக நாவலர்,

வண்ணார் பண்ணை

1878 வெகுதானிய வருடம்,

வைகாசி மாதம்,

24-ஆம் திகதி.

---

பெரியபுராண வகுப்பு

ஆ இ. சேக்கிழார் மன்றச்சார்பில் பெரிய புராண வகுப்பு 24-ம் உ திங்கட்கிழமை பி ப $4\frac{1}{2}$ மணிக்கு செந்தமிழ்ச்சிரோமணி க, கி, நடராஜன் அவர்களால்ஆரம்பிக்கப்பெறவுளது, யா, இந்துக்கல்லூரியில் வகுப்பு திங்கள்தோறும் நடைபெறும்,

## புராணபடனம்

19-11-75 புதன் கிழமை திருக்கார்த்திகையிலன்று திருக்கேதீச்சரத்தில் விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்ந்தபின் மேற்படி புராணம் படித்துப் பயன் சொல்லப் பெற்றது நல்லூர் சைவப் பெரியார் சி. தம்பிஐயா அவர்களும் பூனகரி இணைப்பாறிய உடையார் திரு. கு. அருளம்பலம் அவர்களும் திருக்கேதீச்சர திருவாசகமட தாபகருமாகிய சை.சரவண்முத்து சுவாமி அவர்களும் படிப்பில் பங்கு பற்றினர்கள். பல அடியார்கள் பக்தி சிரத்தையுடன் படிப்பைக் கேட்டு இன்புற்றார்கள் இப் புராண படனம் 1970ம் ஆண்டு தொடக்கம் அவ்வாலயத்தில் வேலணை திருஞானசம்பந்தர் மடாலய பரிபாலன சபை ஆதரவில் நடைபெற்று வருகின்றது அன்பர்கள் திருக்கேதீச்சரப் பெருமானுடைய அருளை அடைவதற்கு இப் புராண படனம் ஏதுவாகும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

இல: ஈடு 14586.

கந்தையா செல்லத்துரை
கொக்குவில் மேற்கு
கொக்குவில் - வாதி

எதிராக

பொன்னு கனரத்தினம்
மந்திப்புலம்
கொக்குவில் மேற்த
கொக்குவில் - பிரதிவாதி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 14586-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1975ம் ஆண்டு மார்கழி மாதம் 23-ம் திகதி (23-12-75) செவ்வாய் கிழமை மு. ப 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- பிரதிவாதி குறித்த வாதிக்கு ரூபா, 4066/-வும் மேலும் ரூபா 2 200/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1974ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975ம் ஆண்டு மார்ச்சு மாதம் 6ந் திகதிவரையுமான வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை சட்ட வட்டியான வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழககுச்செலவு ரூபா 481/79

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கொககுவில் மேற்த இறை' மந்திப்புலம்" நிலபர $5\frac{1}{2}$, இதல மேற்குப் பக்கமாக சீதனங்கொடுதத நில.பர 2,நீக்கி மிகுதி நில பர $3\frac{1}{2}$, வீடும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் தெற்கே இருக்கும் கிணற்றில் தண்ணீர்பங்கும் வழிவாய்க்காலுரித்தும் இந்தப்பரப்பு முன்றரைக்கும் எல்லை கிழக்கு. சின்னப்பொடி பொன்னுக்குரிய ஆதனம் வடக்கும் தெற்கும் ஒழுங்கை மேற்கு நீக்கப்பட்ட ஆதனம் இதடங்கலும்.

சி. செ. பாலசிங்கம்

கொமிஷனரும்

விலைமதிப்பாளரும்

அராலி வடக்கு

வட்டுக்கோட்டை.

---

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ· இல. 9825

1. வல்லிபுரம் சின்னத்தம்பி அல்வாய் மேற்கு — வழக்காளி

எதிராக

1. சவரிமுத்து யோசெப் அல்வாய் மேற்கு — எதிராளி

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும், கீழ்க்காணும் விபரிக்கப்படும் ஆதனத்தை 1975-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ஆம் திகதி (8-12-1975) திங்கட்கிழமை முற்பகல் 9-00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாக இருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலக் கோயிற்பற்று அல்வாய் வீரபாகுதேவன் குறிச்சியிறை 'நீற்றுவான்' பேட்சு $14\frac{3}{4}$. இதிற் கிழக்குப்புறமாக பேட்சு 7, 3/8. எல்லை கிழக்கு: வயிரமுத்து கதிர்காமத்தம்பியின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் வடக்கு: கடல், மேற்கு: முருகர் கணபதிப்பிள்ளையின் உரிமைக்காரருக்குடைய ஆதனம். தெற்கு: ரோட்டு. இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், தென்னைகள், புதிய கல்வீடு முழுவதும் (மதிப்பிட்ட விலை ரூபா 12600/-)

| | |
|---|---|
| தீர்வைத் தொகை | ரூபா 4679 - 00 |
| வட்டி ரூபா 3000/-க்கு 12 வீதப்படி 7-11-67 தொடக்கம் 27-8-68 வரை | 290 - 00 |
| வட்டி ரூபா 4969/-க்கு 5 வீதப்படி 28-8-68 தொடக்கம் 14-11-73 வரை | 1045 - 55 |
| கோட்டுச் செலவு ரூபா 241 - 60 இதில் கொடுபட்டது ரூபா 120 - நீக்கி | 121 - 60 |
| கூட்டுத்தொகை | 6136 - 15 |
| 1970ம் ஆண்டில் கொடுக்கப்பட்டது ரூபா 2090/- 1970ம் ஆண்டு தொடக்கம் 1972ம் ஆண்டுவரை 5 வீத வட்டியுடன் கொடுபட்டது | 2400-00 |
| மிகுதி | 3736 - 15 |
| 7-5-74 இல் கொடுபட்டது | 1000 - 00 |
| | 2736 - 15 |
| வட்டி ரூபா 2736/-க்கு 5 வீதப்படி 7-5-74 தொடக்கம் 8-12-75 விற்பனவுவரை | 216 - 60 |
| மொத்தம் | 2952 - 75 |

க. நல்லலிங்கம்

நீதிமன்ற ஆணையாளரும்

விலை மதிப்பாளரும்

"சிவலிங்க நிலையம்"

வி எம். ரோட்,

பருத்தித்துறை 24-10-75

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல, M B 12278

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. முத்துப்பொன்னையாவின் கைம்பெண் செல்லம்மா உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் — வழக்காளி

எதிராக

1. கதிரன் தம்பித்துரை
2. வெள்ளையன் கதிரனும்
3. பெண் சின்னப்பிள்ளை

[எல்லோரும் உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்] — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 12278 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1975-ம் வூ மார்கழி மீ 29-ந் உ திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை :-

முதல்வட்டி ரூபா 2328 - 50சதம் 1-2-71 தொடக்கம் 17-2-72 வரைககும் ரூபா 2000 க்கு 12 வீத வட்டியும் அதன் முழுத் தொகை இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 360 - 50 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பிரிவு வலிகாமம்கிழக்கு கோப்பாய் கோயிற்பற்று உரும்பிராய்இறை "நவிதன்சீமா" நிலப்பரப்பு மூன்றும் 4 குளியும் வான்பயிர்களும மேற்கு அறையையும் விறுந்தையையும் தவிர்த்து கல்வீடும் கொண்ட ஆதனம். இந்த ஆதனத்தின் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கே முத்தன் நங்கியா ஆதனம் மேற்கு நாகமுத்தன பெண் செல்லமயாவின ஆதனம். தெற்கு நாகமுத்து பரமலிங்கத்தினதும் கதிரன் தம்பித்துரையினதும் ஆதனம். இந்த ஆதனத்தில் சொரியலாக அரைப்பங்கும் அதைச் சேர்ந்தவைகளும மேற்கிலுள்ள ஆதன உரிமையாளன் நாகமுத்துவின் பெண செல்லம்மாவுக்கு இக்கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் உள,

சி. செ. பாலசிங்கம்

கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,

அராலி வடக்கு,

வட்டுக்கோட்டை, 14-11-75.

107 21 - 11

---

## படக்காட்சி

யாழ்ப்பாணவளாக வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகம் ஆகியவற்றின் சார்பிலே இந்தியத்தூதரகத்திலிருந்து பெறப்பட்ட இந்தியத் தொல்பொருளியல் பற்றிய நேர்த்தியான படங்கள் யாழ்ப்பாண வளாகத்திலே காட்டப்பட்டன, இவற்றிலே இந்தியதொல்பொருளியற் தலங்கள், கஜுரகோ கோவில்கள், நாகார்ஜுன கொண்டா பௌத்த கலைச் சின்னங்கள், மாமல்லபுரம் கோவில்கள், மைசூரிலுள்ள பிரபல பேலூர்க் கோவில்கள், சிற்பங்கள், சிவநடனம் முதலியன குறிப்பிடற்பாலன. விளாக விரிவுரையாளர், மாணவர் பலர் இவற்றைக் கண்டு களித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

ஆடிய காலும் அதிற் சிலம்(பு) ஓசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்
கூடிய கோலம் குருபரன் கொண்டாடத்,
தேடி உளேகண்டு தீர்ந்தற்ற வாறே.

I searched for and discovered within myself the sacred Dance of the Supreme Guru, His Feet adorned with tinkling anklets (Bindu and Natham), mouth singing melodious songs and other Limbs with appropriate movements of various sorts. Oh! the way my sufferings disappeared!

Hindu Organ

FRIDAY, NOVEMBER 21, 1975

## So Near Yet So Far!

OUR neighbour, the renowned Bharata Nadu, at its southern tip is only a few miles from us. As the crow flies the distance will be only twenty miles. Yet the link between these two countries that pride in a common heritage of culture, religion and literature has at present become a difficult hurdle,

Time and again, we have in these columns referred to the need for easier facilities of travel between these countries particularly in the case of pilgrims, priests, artistes and scholars. It cannot be denied that travel to other countries must be governed by requirements and regulations. But when applicants for visas satisfy these requirements courtesy demands that the documents for travel should be released well in time to enable the passengers make their arrangements to suit a definite program.

The inconvenience that results from the red-tapism which makes travel between India and our country almost a herculean task affects not merely the travellers concerned but also all others who wait for the passengers to arrive here to attend to scheduled assignments. This hindrance has a telling effect on religious, cultural and literary activities in our country as lecturers, artistes and religious Heads from India very often participate in these programs, a custom that is a historical fact. Recently several organizations in this country have been subjected to this embarrassment.

Leading Saiva organizations have moved in this matter of national importance but the outcome has been not satisfactory. Here is a matter for the immediate attention of the Hindu Religious Affairs Committee and the Ministry of Cultural Affairs.

Notwithstanding the fact that illicit immigrants and emigrants have created a problem for the Governments of these two countries and knowing as we do that there are passengers who make use of their journeys to earn illegal wealth, the stringency of regulations should not be made applicable to genuine travellers who always happen to be members of a culturally high society of learning and religious practice. If these Governments take strict measures to guard the honour of their nations it is equally their duty to draw a definite line between the genuine and the corrupt. It is to be hoped that some remedial steps will be taken in this matter.

## FAO Expert Addressed the Mathematical Society of the Jaffna Campus

Mr. N. Manica Idaikkadar, M. Sc. (Cantab). M. Sc (Lond) working at the F A O, delivered an interesting lecture on *the Development of Agricultural statistics in Developing Countries*, under the auspices of the Mathematical Society of the Jaffna Campus, on the 6th ultimo.

At the outset Mr. Manica Idaikkadar defined the terms 'developing' and 'underdeveloped' and then went on to explain very clearly the role of agricultural statistics in many of the 'developing' countries of the world. He pointed out the methods used in assessing the acreage of a place, the grain yield per acre etc.

He listed the advantages of agricultural statistics in many of the Asian countries where rice is the staple diet and stressed the importance of statistics in the economy of a country especially for planning.

## Foundation Stone Laid for a New Hostel at the Jaffna Campus

Mr. L Sumanadasa, the Vice-Chancellor of the University of Sri Lanka and Mr. K. Bhaskaralingam Additional Secretary to the Ministry of Education laid the foundation stones for the new hostel to be built at the Thirunelvely premises of the Jaffna Campus, on the 7th ultimo. The Campus President Prof. K. Kailasapathy, the Deans, Professors, Lecturers, undergraduates and other employees of the Jaffna Campus, the engineers and other members of the Building Department participated in this function.

The foundation stone was also laid for a water tank at the Vaddukkoddai premises on the same evening.

The Jaffna Campus Planning Committee met on the 8th inst. and discussed the plan for the New Humanities Block to be built at the Thirunelvely premises. It is reliably known that the work for the new Humanities Block will start by January 1976.

*Letter to the Editor*

## Protohistory of Ceylon

Sir,

The reference in an article pertaining to the protohistory of Ceylon, in Daily News of 4.09. 1975, to Tamil words in Ptolemy's map of Ceylon, the following observations by Professor Filliozat of the College of France, Director of Studies, Indian philology, and Secretary Asiatic Society of Paris, in the Journal Asiatique, (Vol CCLXII, 1974, p130) available at the Library of Royal Asiatic Society, Ceylon Branch, should interest your readers 'Pliny alluded to a Malone mons (VI.XXI. 6) characterized as giving shadow towards the North for six months and towards the South for the other six months. Such a mountain is necessarily located on the Equator. The only one corresponding to such a position is the Cunung Indrapura (3 805 m) on the Western coast of Sumatra. Ptolemy is locating one Malconkolon in the Golden Chersonese (VII. 2. 5). These names have no meaning either in Latin or Greek, but in Tamil malai means "mountain" and malaikkal "foot of the mountain". There is a cape just at the foot of the big mountain Indrapura. In January and February the winds are leading the ships directly from South-India and Ceylon to the western coast of Sumatra. We learn by Pliny some information have been known in Italy as early as the first century A.D through Tamil on this peak in Sumatra, but Tamil malai, skr. malaya, is also applied to other mountains or mountainous regions both in South India and South East Asia. The Sera of Pliny (VI. XXIV 4. 8) mistaken by him as peoples of Central Asia are actually the Cerar (Tamil for "peoples of Kerala.")

Yours faithfully,
J. R. Sinnatamby
286, Buller's Road.
Colombo.
8.9.75.

## Sale of Unredeemed Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned between 1-2-71 and 30-9-75 with Mr. S. V. Kanagasabai of Anaikottai Road Kokuvil West Jaffna on Thursday 11-12-75 commencing at 9 a. m. at the said pawn shop.

S Mahadevan.
Auctioneer

643 (191) K. K. S. Road
Jaffna.

(32 14 & 21.)

### NOTICE

This is to inform the general public that I Sambunthar Sandrasegaram alias Sandy Sega San of Kalviyankadu, Jaffna in the Republic of Sri Lanka presently residing at 52 Howard Road, Dingley, Victoria, have revoked the Power of Attorney granted by me to Sundarampillai Nadarajah of Gnanapaksarothaya Sangam Road, Kalviyankadu, Jaffna under No: 8812 dated 18 11-1971 and attested by S. Kanagaratnam, Notary Public by Revocation of Power of Attorney dated 28-10-1975 and attested by A. Paranavitana of 43 Aitchison Avenue, Ashburton Barrister & Solicitor.

The said Sundarampillai Nadarajah has ceased to be my attorney with effect from 28 10-75 and that all transactions made after the said date by the said Nadarajah shall become null and void.

S. Kanagaratnam
Attorney-at-law for
S. Sandrasegaram alias
Sandy Sega San.
13th November, 1975.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்;

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday November 21, 1975.

Editor-in-Chief K. N. Sivapirakamys

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org